| Headline | Start your journey through cheaper insurance | | |
|---|---|---|---|
| MediaTitle | Malaysian Nanban (Sunday) | | |
| Date | 06 Aug 2017 | Language | Tamil |
| Circulation | 115,000 | Readership | 523,000 |
| Section | News | Page No | 7 |
| ArticleSize | 857 cm² | Journalist | NULL |
| PR Value | RM 17,452 | | |
| | | | |



# மலிவான காப்புறுதி வழி

## உங்கள் பயணத்தை தொடங்கலாம்

TOKIO MARINE

கோலாலம்பூர், ஆக..6-

காப்புறுதி முகவரைக் கண்டால் ஓடி ஒளிந்து கொள்பவர்களே இன்று அதிகம் எனலாம். அந்த காலத்தில் கையில் ஒரு பையுடன் நம் வீடு தேடி வந்து ஒரு பாலிசிதாரராக நம்மை பதிவு செய்து விட்டு, பிறகு மாதா மாதம் வீட்டிற்கு வந்து பாலிசி கட்டணத்தை பெற்றுச் செல்வார்கள் அந்த முகவர்கள்.

ஆயுள் காப்புறுதி மட்டுமல்லாது, விபத்து, மருத்துவக் காப்புறுதி என இன்று பல்வேறு வகையான காப்புறுதிகள் அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், அன்று போல் இல்லாமல் இன்று நாமே நமக்குத் தேவையான காப்புறுதியை இணையத்தளம் வழி தேர்வு செய்து மின்னியல் முறையில் கட்டணம் செலுத்தும் முறைகள் மிகவும் எளிதாக்கப்பட்டுள்ளன என்று கூறுகிறார் நாட்டின் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான தோக்கியோ மரீன் லைஃப் நிறுவனத்தின் தலைமை செயல்முறை அதிகாரி தோய் சீ ஜோங்.

ஒரு சாதாரண காப்புறுதி என்றால் பத்தே நிமிடங்களில் உங்களால் வாங்க முடியும். அந்த அளவிற்கு இணையத்தளம் உங்களுக்கு வசதியை வழங்குகிறது. ஆனால், சேமிப்பு, முதலீடு வகையிலான காப்புறுதி பாதுகாப்பை நீங்கள் வாங்குவதற்கு தோக்கியோ மரீன் முகவர்கள் என்றென்றும் தயாராக உள்ளனர். இம்மாதிரியான காப்புறுதிக்கு கூடுதலான கவனமும், ஆலோசனையும் தேவைப்படுவதே இதற்கு காரணமாகும்.

ஒரு கணினி வழி உங்களுக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் உடனுக்குடன் அந்த முகவரின் வழி நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். மாதா மாதம் காப்புறுதிக்கான கட்டணத்தையும் வங்கி மூலமாக நீங்கள் செலுத்துவதற்கான ஏற்பாடுகளை அந்த முகவர் வழி நீங்கள் செய்துகொள்ளலாம். அந்த அளவிற்கு தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு ஏற்ப காப்புறுதி துறையும் வளர்ச்சிக் கண்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

மலேசிய நண்பனுடன் நடத் தப்பட்ட சிறப்பு நேர்காணலில் தோய் சீ ஜோங் தோக்கியோ மரீன் காப்புறுதி நிறுவனத்தின் வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு தகவல்களை பகிர்ந்துகொண்டார்.

தற்போது முகவர் வழி ஆவணங்களை சமர்ப்பித்து, அவை பரிசீலனை செய்யப்பட்ட பிறகே பாலிசி நம் கையில் கிடைக்கின்றது. ஆனால், இன்னும் ஈராண்டுகளில் காப்புறுதி எடுக்க நினைக்கும் ஒருவர் தேவையான தகவல்களை உடனுக்குடன் வழங்கி பாலிசியை உடனே பெறும் அளவிற்கு வசதிகள் மேம்பாடையும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

காப்புறுதி நிறுவனங்கள் மட்டுமன்றி, நிதித்துறையில் சம்பந்தப்பட்ட மற்ற நிறுவனங்களும் காப்புறுதியின் அவசியம் குறித்து பயனீட்டாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் அவசியம் ஏற்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுவில் பார்த்தால் காப்புறுதி எடுப்பதன் அவசியம் பயனீட்டாளர்களுக்கு ஓரளவிற்கு தெரிந்திருந்தும், அதனை செயல்படுத்துவதில் இன்னும் தயக்கம் காட்டி வருகின்றனர் என்பதுதான் உண்மை.

காப்புறுதி முகவர்களை கண்டால் முகம் சுளிப்பவர்கள் அல்லது அவர்களை பயந்து ஒதுங்குபவர்களை இன்னமும் நாம் காண முடிகிறது. ஒவ்வொருவரும் எதிர்நோக்கக் கூடிய நிதிச்சுமை இதற்கு காரணமாக இருக்கலாம். ஆனால், எடுத்த எடுப்பிலேயே அகலக்கால் வைப்பதற்கு பதில், மலிவான ஒரு காப்புறுதியின் வழி உங்கள் பயணத்தை நீங்கள் தொடங்கலாம் என்று அவர் ஆலோசனை கூறுகிறார்.

(அடுத்த வாரம் தொடரும்)



தோய் சீ ஜோங் - தோக்கியோ மரீன் ஆயுள் காப்புறுதி மலேசியா நிறுவனத்தின் (Tokio Marine Life Insurance Malaysia bhd.) தலைமை செயல்முறை அதிகாரி. லியாம் எனும் மலேசிய ஆயுள் காப்புறுதி சங்கத்தின் தலைவர் பொறுப்பையும் இவர் ஏற்றுள்ளார். காப்புறுதி சம்பந்தப்பட்ட பல்வேறு இதர நிறுவனங்களின் நிர்வாக வாரியத்திலும் இவர் இடம்பெற்றுள்ளார். மிகவும் பிரசித்திப்பெற்ற நம்பகமான ஒரு காப்புறுதி நிறுவனமாக தோக்கியோ மரீனை உருவாக்குவதில் இவரின் பங்கு குறிப்பிடத்தக்கது.

# You Can Start Your Journey By

# Having An Affordable Insurance Policy

Kuala Lumpur, Aug. 6 - Today, we can say that there are many people who avoid seeing insurance agents. In the olden days, insurance agents visit our house with a shoulder bag and register us as a policy holder. Thereafter they visit us every month to collect monthly premium.

Today, besides life insurance, there are many other types of policies being introduced such as accident policies, medical insurance policies etc. According to Mr Toi See Jong, the Chief Executive Officer of Tokio Marine Life, one of the leading insurance companies in the country, unlike the olden days, today we can choose the policies according to our needs and pay for the premium through websites.

If you purchase a simple insurance, you would be able to get it in just ten minutes. The websites provide you with facilities to such an extent. However, if you wish to purchase a savings and investment-linked insurance, our agents are always ready to help you. The reason for this is that there is a need for additional care and advice for these types of policies.

You can get all the information you need from the agent instantly through a computer. You can arrange to pay the premium via monthly online bank transfer with the help of the Agent. Mr. Toi described that to such an extent the insurance sector has grown to match the technological development. In an interview with Malaysia Nanban, Mr. Toi See Jong shared several information including the growth of Tokio Marine Insurance Company. Currently a policy comes to our hands only after the documents are submitted through the agent and are reviewed. However, he expressed the hope that within the next two years, the facilities would be developed to the extent that anyone who wishes to take a policy can get the policy instantly by providing the necessary information. He indicated that the development not only applies to insurance companies, other companies in the financial sector also have to make the beneficiaries aware about the importance of Insurance.

Generally, even though the beneficiaries have known the importance of taking an insurance policy, it is a fact that they are still hesitated in taking action.

We can still see people who are not happy or just avoid seeing them because they are fear of seeing insurance agents. The financial burden everyone faces may be a reason for this. However, he suggested that instead of taking a broad step at the initial stage, you can begin your journey with an affordable insurance policy. (To be continued next week)

Toi See Jong - Tokio Marine Life Insurance Company's (Tokio Marine Life Insurance Malaysia Bhd.) Chief Executive Officer. He is also the President of LIAM, the Malaysian Life Insurance Association. He is also a member in the Administrative Board of several insurance related companies. His contribution in developing Tokio Marine as a superb famous and trustworthy insurance company is notable.